கல்வி அளவீடும் மதிப்பீடும்

கலாநிதி க. ஞானரெத்தினம்

அறிமுகம் :

எந்தவொரு செயற்பாட்டிற்கும் நோக்கம் அவசியமானதாகும். வரையறுக்கப்பட்ட நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாட்டுக்கே வெற்றி அடைவதற்கான வாய்ப்பும் அதிகமாகவுள்ளது. அனைத்துச் செயற்பாடுகளிலும் வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக ‘‘மதிப்பீடு’’ கருதப்படுகின்றது. ஒருவரை அல்லது ஒரு பண்பை அல்லது ஒரு செயற்பாட்1டம திப்பீடு செய்வதற்கு உண்மைத் தன்மையுடைய போதுமான ஆதாரங்கள் அவசியமாகின்றன. ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மதிப்பீடானது அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் நம்பகத் தன்மை உடையதாகவும் அமையும். இவ் ஆதாரங்களில் ‘‘அளவீடு’’ என்பது முதன்மை பெறுகின்றது. அளவீடு, மதிப்பீடு ஆகிய இருபதங்களும் கல்வித்துறையில் இன்று முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. கல்விப்புலம் சார்ந்த அனைவருக்கும் இவ்விரு பதங்களின் விளக்கம், தேவைப்பாடு என்பன பற்றி தெளிவாகப் புரியவைப்பதே இவ் ஆக்கத்தின் பிரதானமான நோக்கமாகும்.

2.0 அளவீடு

ஒரு பொருள், ஓர் ஆள் அல்லது ஒரு நிலமை என்பனவற்றின் பண்பினை தொகை அளவில் அல்லது எண்ணிக்கை ரீதியாக விபரிப்பது ‘‘அளவீடு’’ எனப்படும்.

உதாரணமாக ஒரு மனிதனின் நிறை, ஒரு மேசையின் உயரம், ஒரு மாணவன் குறித்த ஒரு பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளி, இன்றைய வெப்பநிலை, தற்போதைய நேரம் போன்றவற்றின் விடைகள் எண்ணிக்கை ரீதியாகவே வெளிப்படும். இவை எல்லாம் அளவீடுகளாகும்.

குறிப்பாக எவ்வளவு? என்ற வினாவுக்கு ‘‘அளவீடு’’ பதில் தருகின்றது.

2.1 அளவீட்டின் பண்புகள் :

அளவீடானது இரு முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளது. அவையாவன

- தனிப்பூச்சியம்
- சம அலகுகள்

‘‘தனிப்பூச்சியம்’’ என்பது அளவிடப்படும் பண்புக் கூறு முற்றாக அற்ற நிலையாகும். உதாரணமாக ஒரு மாணவன் கணிதப்பாடத்தில் பூச்சியம் புள்ளி பெற்றானாயின் அவனுக்கு கணிதப் பாடத்தில் எந்த அறிவும் இல்லை என கருதமுடிந்தால் இதனை ‘‘தனிப்பூச்சியம்’’ எனக் கூறலாம்.

இதேபோல் ''சம அலகுகள்'' என்பது குறித்த பெறுமானங்களுக்கிடையேயான இடைவெளிகள் சமமாக காணப்படுதலாகும். உதாரணமாக ஒரு மீற்றர் சட்டத்தில் 2m இற்கு 3m இற்கும் இடையேயான இடைவெளியும் 5m இற்கு 6m இற்கும் இடையேயான இடைவெளியும் சமமாக காணப்படும். மேலும் ரூபாய் 100/= என்பது ரூபாய் 50/= இன் இரு மடங்கு எனவும் ஏற்றுக்கொள்ளமுடியும். இவை ''சம அலகுகள்'' உடையவை. மாறாக கணித பாடத்தில் 60 புள்ளிகளைப் பெறும் மாணவனின் கணிதத்திறனானது 30 புள்ளிகளைப் பெறும் மாணவனின் கணிதத்திறனில் இரு மடங்கு என கூறமுடியாது. ஏனெனில் இவை ''சம அலகுகள்'' அற்றவையாகும்.

2.2 அளவீட்டின் வகைகள்

எண் பெறுமானங்களாகக் கருதப்படுகின்ற அளவீடுகளை அவற்றின் பண்புகளைப் பொறுத்து இரு பிரிவுகளாக வகைப்படுத்தமுடியும்.

i. பௌதிக அளவீடு

ii. கல்வி அளவீடு அல்லது உள ரீதியான அளவீடு

பௌதிகப் பண்புகளை எண் பெறுமானமாகத் தெரிவிப்பது பௌதிக அளவீடாகும். நீளம், உயரம், நிறை, நேரம், வெப்பநிலை, பரப்பு . . . . போன்றவை இதனுள் அடங்கும்.

மனிதனின் கல்விக்கருமங்களுடன் தொடர்புபட்ட விடயங்களை எண்பெறுமானமாக வெளிப்படுத்துவது கல்வி அளவீடாகும். பாட அடைவு, நுண்ணறிவு, மனப்பாங்கு, விருப்பு, வெறுப்பு போன்றவை இதற்கான சில உதாரணங்களாகும்.

2.3 அளவீட்டு கருவிகள்

அளவீடுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் அளவீட்டுக் கருவிகள் எனப்படும். மதிப்பீட்டின் நிமிர்த்தமே அளவீடுகள் பெறப்படுவதால் மதிப்பீட்டுக்கு அவசியமான தரவுகளை அளிக்கும் இத்தகைய கருவிகள் மதிப்பீட்டுக் கருவிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

பௌதிக அளவீடுகளைப் பெறுவதற்காக மிகவும் திருத்தமான அளவீட்டுக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. தராசு, மீற்றர் சட்டம், வெப்பமானி போன்றவை சில உதாரணங்களாகும்.

கல்வி அளவீட்டில் மாணவர்களின் பாட அடைவுகளை அளப்பதற்காகப் பொதுவாக ''வினாப்பத்திரம்'' பயன்படுத்தப்படுகின்றது. இது அனைவராலும் இலகுவாக தயாரிக்கப்படக்கூடியது. தயாரிப்பதற்கான நடைமுறைகளை ஒழுங்காக பின்பற்றி தயாரிக்கப்படும் வினாப்பத்திரம் நம்பகம், தகுதி உடையதாகக் காணப்படும். இதன் மூலம் அறியப்படும் அளவீடுகள் மிகத் திருத்தமானதாகவும் அமையும்.

மேலும் நுண்ணறிவை அளப்பதற்காக உளச்சார்பு சோதனைகளையும் மனப்பாங்கை அளப்பதற்காக தகவற்போதனை, தீர்ப்புச்சோதனை போன்றவற்றையும் சமூகத் தொடர்புகளை அளப்பதற்காக சமூகமானச் சோதனை போன்றவற்றையும் பயன்படுத்தமுடியும்.

மதிப்பீட்டின் நோக்கம், அளவீட்டுக்கு உட்படுத்தப்படும் அம்சத்தின் இயல்புகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பொருத்தமான கருவிகளைத் தெரிவு செய்து கொள்ளமுடியும். இக்கருவிகளினூடாக தரவுகள் அல்லது தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவை அனைத்தையும் எண்பெறுமானமாக மாற்றியமைப்பதற்காக பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன.

பௌதிக அளவீடு - கல்வி அளவீடு என்பனவற்றிற்கிடையேயான வேறுபாடு

	பௌதிக அளவீடு	**கல்வி அளவீடு**
I	திருத்தமான அளவீட்டு கருவிகள் உண்டு.	அளவீட்டு கருவிகளில் குறைபாடுகள் இருக்க வாய்ப்புள்ளது
II	அளவீடுகள் உயர் செம்மையானவை	ஓரளவு செம்மையானவை
III	அளவீடுகள் பூச்சியத்தில் இருந்து ஆரம்பமாகும்.	அவ்வாறில்லை
IV	அளவீடுகளுக்கிடையேயான இடைவெளி சமமானது.	அவ்வாறில்லை
V	அளவிடுவோரின் மனநிலை செல்வாக்கு செலுத்தாது.	அளவிடுவோரின் மனநிலை செல்வாக்கு செலுத்தும்.

2.4 அளவீட்டில் வழுக்கள்

எத்தகைய அளவீடாயினும் வழுக்கள் ஏற்படுவதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

i. அளவீட்டு கருவி சார்பான வழு
ii. அளவிடுவோர் சார்பான வழு
iii. அளவிடப்படும் பொருள் சார்பான வழு

இத்தகைய மூன்று வழுக்களும் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பௌதிக அளவீட்டில் மிகவும் குறைவாகவும் கல்வி அளவீட்டில் மிக மிக அதிகமாகவும் உள்ளன.

கல்வி அளவீட்டில் அளவீட்டு கருவியாக பொதுவாக கருதப்படுகின்றன வினாப்பத்திரம் தயாரிக்கப்படுவதில் உள்ள குறைபாடு அதன் மூலம் பெறப்படும் அளவீட்டில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. மேலும் "அளவிடுவோர்" என்பது ஒரு ஆசிரியரை அல்லது மனிதனைக் குறிக்கின்றது. இவர்களின் சிந்தனை, பக்கச்சார்பு, மனநிலை போன்றவை அவர்களால் பெறப்படும் அளவீடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதேபோல் "அளவிடப்படும் பொருள்" என்பது மாணவர்களை அல்லது மனிதர்களை குறித்து நிற்கின்றது. இவர்களின் உளவியல் பிரச்சினை, முந்திய கல்வித் தகைமை, சூழல் என்பனவும் அளவீட்டில் செல்வாக்கைச் செலுத்தக்கூடியவை.

2.5 அளவீட்டின் நான்கு வகைப்படுத்தல்கள்

எண் பெறுமானமாக குறிக்கப்படுகின்ற பல்வேறு வகையான அளவீடுகளை நான்கு வகைப்படுத்தல்களுக்குள் அடக்கமுடியும். அவையாவன :

- பெயர் அளவிடை
- வரிசை அளவிடை
- ஆயிடை அளவிடை
- விகித அளவிடை

2.5.1 பெயர் அளவிடை

எமது சூழலில் காணப்படுகின்ற எந்தவொரு பொருளையோ அல்லது மனிதனையோ அல்லது நிறுவனத்தையோ சுட்டிக்காட்டுவதற்காக நாம் எண்களைப் பயன்படுத்துகின்றோம். இத்தகைய "எண்கள் பெயர் அளவிடைகள்" எனப்படும்.

வீட்டு இலக்கம், தொலைபேசி இலக்கம் , வங்கிக் கணக்கு இலக்கம் , மோட்டார் வாகன இலக்கம், பரீட்சைக்கான சுட்டெண் போன்றவை இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

அத்துடன் பெயர் அளவிடையானது தமக்கிடையே வேறு எத்தகைய தொடர்புகளையும் வெளிப்படுத்தமாட்டாது. உதாரணமாக ஒருவரது வீட்டு இலக்கம், அவரது தொலைபேசி இலக்கம், அவரது மோட்டார் வாகன இலக்கம் என்பன வேறு வேறானவையாக இருப்பதோடு இவற்றிற்கிடையே எத்தகைய தொடர்பும் இருக்காது.

2.5.2 வரிசை அளவிடை

பண்புகளைச் சுட்டிக்காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் எண்கள் அவற்றிற்கிடையேயான உயர்வு - தாழ்வு அல்லது பெரியது - சிறியது அல்லது கூடியது - குறைந்தது போன்ற ஒப்பீட்டு ரீதியான வரிசை நிலைகளை வெளிப்படுத்துமாயின் அது "வரிசை நிலை அளவிடை"ஆகக் கருதப்படுகின்றது.

வகுப்பு ஒன்றிலே மாணவர்களின் தேர்ச்சி நிலையைச் சுட்டிக்காட்டும் 1ம், 2ம், 3ம்… போன்ற இடங்களும் விளையாட்டுப் போட்டியில் வீரர்கள் பெற்றுக் கொண்ட 1ம், 2ம், 3ம் . . . இடங்களும் இதற்கான சில உதாரணங்களாகும்.

அத்துடன் வரிசை நிலை அளவீடுகள் நிலை வேறுபாட்டினை வெளிப்படுத்துமே தவிர எத்தகைய வேறுபாடு என்பதனை வெளிக்காட்டாது.

உதாரணமாக வகுப்பொன்றில் புள்ளிகளின் அடிப்படையில் 1ம், 2ம், 3ம் நிலைகளை பெற்றுக்கொண்ட மாணவர்களை எடுத்துக் கொண்டால் இவர்களின் வரிசை நிலையை எம்மால் அறிந்து கொள்ளமுடிகின்றது. ஆயினும் இந் நிலைகளைப் பெற்றுக் கொண்டவர்க்கிடையேயான வேறுபாட்டினை அறிந்து கொள்ளமுடியாது.

2.5.3 ஆயிடை அளவிடை :

தனிப்பூச்சியம் அற்றதும் சம அலகுகள் இல்லாத தன்மையைக்கொண்டதுமான எண் பெறுமானங்கள் ‘‘ஆயிடை அளவிடை’’ யைச் சார்ந்தவையாகும்.

பரீட்சையொன்றில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட பாட அடைவுப் புள்ளிகள், வெப்பநிலை என்பன ஆயிடை அளவிடைக்கான சிறந்த உதாரணங்களாகும்.

2.5.4 விகித அளவிடை :

தனிப்பூச்சியம் உடையதும் சம அலகுகளைக் கொண்டதுமான அளவிடைகள் ‘‘விகித அளவிடைகள்’’ ஆகும்.

பெரும்பாலான பௌதிக அளவிடைகள் விகித அளவிடைகளாகக் கருதப்படுகின்றன. நிறை, உயரம், பரப்பு, கனவளவு, நேரம் போன்றவற்றின் பெறுமானங்களை இதற்கான உதாரணங்களாக எடுத்துக் கூறலாம்.

3.0 மதிப்பீடு

ஏதாவது ஒரு செயற்பாட்டின் வெற்றியை தீர்மானிக்கும் முறையான செயலொழுங்கு ‘‘மதிப்பீடு’’ ஆகும். மேலும் மதிப்பீட்டின் மூலம் பெறப்படும் பெறுமானங்களைப் பயன்படுத்தி யாதாயினும் ஒரு முடிவுக்கு வரல் அல்லது பெறப்படும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானங்களை மேற்கொள்ளல் மதிப்பீடு எனவும் கூறலாம்.

மதிப்பீடு செய்வதற்கு அளவீடு அவசியமாகும். இதேபோன்று கல்வி கருமங்களுடன் தொடர்புபட்ட விடயங்களை மதிப்பீடு செய்வது ‘‘கல்வி மதிப்பீடு’’ எனப்படும்.

3.1 கல்வியில் மதிப்பீட்டுக்கு உட்படக்கூடிய பரப்புக்கள்

பாடசாலையில் பல்வேறு வயதுக் குழுவினர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். பாடவிதானம், இணைப்பாடவிதானம் என்ற இரு வகுதிகளினுள்

அடக்கப்படுகின்ற அனைத்துச் செயற்பாடுகளிலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. இதன் காரணமாக இவற்றின் வெற்றியைத் தீர்மானிப்பதற்கு மதிப்பீடு நடத்த வேண்டியது மிக்க அவசியமானதாகும். பாடசாலையில் மதிப்பீடு செய்யவேண்டிய முக்கிய பரப்புக்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- மாணவர்களின் கல்வி அடைவு.
- மாணவர்களின் திறன், மனப்பாங்கு, ஆளுமை போன்றவை.
- கற்பித்தலுக்கான பாடத்திட்டம்
- ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடு.
- கற்பித்தலின் போது உபகரணப்பயன்பாடு.
- மதிப்பீட்டு கணிப்பீட்டு நடைமுறை.
- வகுப்பறை முகாமைத்துவம்.
- கலைத்திட்ட நடைமுறையும் பொருத்தப்பாடும்.
- அதிபரின் முகாமைத்துவம்.
- பௌதிக வளப் பயன்பாடு.

3.2 மதிப்பீட்டுச் செயலொழுங்கு

மதிப்பீட்டுச் செயலொழுங்கில் ஐந்து படிகள் உள்ளன. அவையாவன

1) எதனை மதிப்பீடு செய்வது என்பதனைத் தீர்மானித்தல். (நோக்கத்தை வரையறுத்தல்)

ஏற்கனவே கருதப்பட்ட கல்வி மதிப்பீட்டுக்கு உட்படும் பரப்புகளில் எந்த விடயத்தை மதிப்பீடு செய்வது என்பதனை முதலில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

2) அளவீட்டுக் கருவிகளை தெரிவு செய்தலும் உருவாக்குதலும்.

எந்த விடயத்தை மதிப்பீடு செய்வது என்பதனைத் தீர்மானித்து அதற்கேற்ப பொருத்தமான கருவியை உருவாக்குதல் வேண்டும். அளவீட்டுக் கருவியில் ஏற்படும் வழுவானது மதிப்பீட்டில் பெரும் செல்வாக்கைச் செலுத்தும் என்பதும் கருதப்படவேண்டிய முக்கிய விடயமாகும்.

3) வேண்டிய விடயங்களை அளவீடு செய்தல்

மதிப்பீட்டு நோக்கத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட அளவீட்டு கருவியினூடாக வேண்டிய அளவீடுகளை பெறுதல் வேண்டும்.

கல்வி அடைவைப் பெறுவதனால் குறித்த மாணவர்களுக்கு பரீட்சை நடாத்தி புள்ளிகள் (அளவீடுகள்) பெறப்படுவதனை இது குறிக்கின்றது.

4) பெறப்பட்ட அளவீடுகளை வைத்துக் கொண்டு ஒப்பீடு செய்தல் அல்லது பகுப்பாய்வு செய்தல்.
5) செயற்பாட்டின் வெற்றியைத் தீர்மானித்தல்.

3.3 கல்வி மதிப்பீடு தொடர்பான ஒப்பீட்டு முறைகள் :

குறிப்பாக மாணவர்களின் கல்வி அடைவைத் தீர்மானிப்பதற்காக இரண்டு ஒப்பீட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.அவையாவன

- நியதி மதிப்பீடு
- நியம மதிப்பீடு

வகுப்பறைக்கு பாட ஆயத்துடன் செல்லுகின்ற ஓர் ஆசிரியர் தனது நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதனை அறிவதற்காக மதிப்பீடு நடாத்த வேண்டியது அவசியமாகின்றது. இதற்காக ஆசிரியர் தமது கற்பித்தல் செயற்பாட்டின் பின்னர் சோதனை அல்லது பரீட்சை நடாத்துவது வழமை. இதன் பின்னர் மாணவர்களின் விடைப்பத்திரங்களைத் திருத்தி ஒவ்வொரு மாணவர்களும் பெற்றுக் கொண்ட புள்ளிகளை அறிந்து கொள்வார். இறுதியாக மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளை வகுப்பறையுடனோ அல்லது வெளி நிலமைகளுடனோ ஒப்பீடு செய்வது ஆசிரியரின் கடமையாகும்.

ஒரு குறித்த மாணவன் பெற்றுக் கொண்ட புள்ளியை பரீட்சைக்கு தோற்றிய ஏனைய மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளுடன் ஒப்பீடு செய்து குறித்த மாணவனின் வெற்றியை தீர்மானிக்கும் செயல்முறை நியதி மதிப்பீடாகும்.

இதேபோல் குறித்த மாணவன் பெற்றுக் கொண்ட புள்ளியை அவன் பெறவேண்டும் என்று முன் கூட்டியே எதிர்பார்த்த புள்ளியுடனோ அல்லது ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட நியமத்துடனோ ஒப்பீடு செய்வது நியம மதிப்பீடாகும்.

உதாரணமாக :

40 மாணவர்களைக் கொண்ட வகுப்பறையில் ரவி என்ற மாணவன் கணிதப் பாடத்தில் 65 புள்ளிகள் பெற்றுள்ளான். கணிதப்பாடத்தின் சராசரிப் புள்ளி 40 எனவும் ரவியின் இப்புள்ளியானது 4வது நிலையில் உள்ளது எனவும் A சித்தி என்பது 75 புள்ளிகளுக்கு மேல் எனவும் கொள்வோம். இதன் அடிப்படையில் ரவி என்ற மாணவன் தொடர்பாக எம்மால் பல்வேறு ஒப்பீடுகளை மேற்கொள்ளலாம்.

ஒப்பிடு 1 : நியதி மதிப்பீடு

இக் குறித்த வகுப்பில் ரவி என்ற மாணவன்

- கணிதப்பாடத்தில் 4வது இடத்தில் உள்ளான்.
- 36 மாணவர்களை விட கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளான்.
- சராசரிப் புள்ளியை விட 20 புள்ளிகளைக் கூடுதலாகவும் பெற்றுள்ளான்.

ஒப்பீடு 2 : நியம மதிப்பீடு

(1) ரவி என்ற மாணவன் A சித்தி பெறுவதாயின் இன்னும் 10 புள்ளிகளைப் பெறவேண்டும்.

(2) அனைவரும் எதிர்பார்த்தார்கள் ரவி 85 புள்ளிகளைப் பெறுவான் என.

3.4 மதிப்பீட்டு வகைகள் :

மதிப்பீடு நடைபெறும் சூழல், நேரம், தேவைப்பாடு என்பனவற்றைக் கருத்தில் கொண்டு நடைபெறுகின்ற மதிப்பீடானது நான்கு பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- அமைப்பு மதிப்பீடு அல்லது இடையிட்ட மதிப்பீடு
- இறுதி மதிப்பீடு அல்லது கூட்டு மதிப்பீடு
- தகுதி நிலை காண் மதிப்பீடு
- ஆய்ந்தறி மதிப்பீடு

3.4.1 அமைப்பு மதிப்பீடு

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நிகழும்போது இடைக்கிடையே மேற்கொள்ளப்படும் மதிப்பீடு அமைப்பு மதிப்பீடு ஆகும். இதன் மூலம் பாடவிடயத்தில் எந்தளவு விளக்கத்தை மாணவர்கள் பெற்றுள்ளனர் என்பதனை அறிந்து கொள்ளலாம்.

பிரதான நோக்கங்கள் :

i. கற்றலின் பால் மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பது.

ii. தொடர்ச்சியாக பின்னூட்டல் வழங்குவது.

iii. மாணவர்களுக்கு போதிய கணிப்பைக் கொடுப்பது.

iv. ஆசிரியர் தமது கற்பித்தலில் மாற்றங்களை ஏற்படுத்துவது.

3.4.2 இறுதி மதிப்பீடு :

பாடநெறி முடிவில் அல்லது வருட இறுதியில் நடாத்தப்படும் மதிப்பீடு இறுதி மதிப்பீடு எனப்படும்.

பிரதான நோக்கங்கள் :

(I) மாணவர்களுக்கு புள்ளிகளும் தரங்களும் வழங்குதல்.
(II) கற்றல் குறிக்கோள் எந்தளவு அடையப்பட்டுள்ளது என்பதனைச் சோதித்தல்.
(III) ஆசிரியர் தமது கற்பித்தலின் வெற்றியைத் தீர்மானித்தல்.

3.4.3 தகுதி நிலைகாண் மதிப்பீடு :

ஏதுமோர் தேவையை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் தகுதியை அறிவதற்காக நடாத்தப்படும் மதிப்பீடு இதுவாகும்.

பிரதான நோக்கங்கள்

I) திறமை அடிப்படையில் குழுக்கள் பிரித்தல்.
II) புலமைப்பரிசில் வழங்குவதற்கு மாணவர்களைத் தெரிவு செய்தல்.
III) பாடநெறிகளுக்கு அல்லது சில செயற்பாடுகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல்.

3.4.4 ஆய்ந்தறி மதிப்பீடு

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவர்களின் பின்னடைவிற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக நடாத்தப்படும் சோதனை ஆய்ந்தறி மதிப்பீடு எனப்படும்.

I) பரிகார கற்பித்தல் நடாத்துதல்.
II) குறித்த பாடத்தில் மாணவர்களின் பின்னடைவிற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிதல்.

உதாரணமாக :

கணிதப்பாடத்தில் ஒரு மாணவன் மிகவும் குறைவான புள்ளியைப் பெற்றுள்ளான் எனக் கொள்வோம். இக்குறைவுக்கு பல காரணங்கள் இருக்கலாம். பாடவிளக்கமின்மை, பாடத்தில் ஆர்வமின்மை, ஆசிரியரில் விருப்பின்மை, உளவியல் பிரச்சினை, முந்திய கல்வித் தகைமை, கிரகித்தல் குறைபாடு என இது பல வகைப்படும். இவற்றுள் குறித்த எவ்விடயம் இம் மாணவனின் பிரச்சினையில் அதிகூடிய தாக்கம் செலுத்துகின்றது என்பதனை அறிவதற்கு ஆய்ந்தறி மதிப்பீடு நடாத்த வேண்டும்.

4.0 கணிப்பீடு

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டின் போது அவர்களின் பலம், பலயீனம், இயலுமை - இயலாமை என்பனவற்றை அறிந்து அவர்களை ஒரு தேர்ச்சி மட்டத்திலிருந்து அடுத்த தேர்ச்சி மட்டத்திற்கு உயர்த்துவதற்காக ஆசிரியர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் உந்துதல் கணிப்பீடு எனப்படும்.

வகுப்பறையில் மாணவர்களை அவதானித்தல், பாராட்டுக்கள், பெயர் குறிப்பிடுதல், அருகில் செல்லுதல், பரிசில்கள் வழங்குதல் போன்றவை ‘‘கணிப்பீட்டிற்கான’’ உதாரணங்களாகும்.

ஆனால் இவற்றை மேற்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் தேவைப்படுகின்றன. இதன் காரணமாக கணிப்பீட்டு கருவி மூலம் கணிப்பீட்டு பரீட்சையை நடாத்தி, கணிப்பீடுகளை வழங்கலாம்.

கணிப்பீடு எந்த நேரத்திலும் எவ்விடத்திலும் மேற்கொள்ள முடியும். இது மாணவர்களுக்கு ஊக்குவிப்பையும் மகிழ்ச்சியையும் வழங்குவதாக அமையவேண்டும். மாறாக புள்ளிகளையும் தரங்களையும் வழங்குவதாக அமையக்கூடாது.

கணிப்பீடு உயர்ந்த மட்டத்தில் நடைபெறும்போது மதிப்பீடு உயர்வாக அமையும்.

5.0 கணிப்பிடு - மதிப்பீடு ஓர் ஒப்பீடு

	கணிப்பீடு	மதிப்படு
I	ஊக்குவிப்பை வழங்கும்	தரங்களையும் புள்ளிகளையும் வழங்கும்.
II	எங்கும் எப்போதும் நடைபெறலாம்.	வகுப்பறையில் குறித்த சந்தர்ப்பத்தில் நடைபெறும்
III	கற்றலின்பால் கவர்ந்திழுக்கும்	கற்றலை மேம்படுத்தும்.
IV	இலகுவானது	கடினமானது
V	குறுகிய நேரத்தில் முடிவடையும்.	கூடிய நேம் எடுக்கும்.

முடிவுரை

எந்தவொரு செயற்பாட்டினதும் வெற்றியைத் தீர்மானிப்பதற்கு மதிப்பீடு இன்றியமையாததாகும். இம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு அளவீடு அவசியமானதாகும். இவ் அளவீடுகள் அளவீட்டுக்கருவிகள் மூலம் பெறப்படும். வகுப்பறையில் மாணவர்களின் கல்வி அடைவை அளப்பதற்கு பொதுவாக ‘‘வினாப்பத்திரம்’’ என்ற அளவீட்டு கருவி

பயன்படுத்தப்படுகிறது. இவ்வினாப்பத்திரத்தில் ஏற்படுகின்ற வழுக்கள் அளவீட்டில் வழுக்களை ஏற்படுத்தி மதிப்பீட்டில் பாதிப்பை ஏற்படுத்திவிடும். ஆகவே வினாப்பத்திரம் தயாரிப்பதற்கான திட்டங்கள், அணுகுமுறைகள் பற்றியும் எமது ஆசிரிய சமூகம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமானதாகும்.

இவ் ஆக்கமானது அளவீடு, மதிப்பீடு, கணிப்பீடு போன்ற பதங்கள் பற்றித் தெளிவான விளக்கத்தை தந்துள்ளது. கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் இவற்றை விளங்கி வெற்றிகரமான கற்பித்தலை மேற்கொள்ள முயலுவார்கள் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

உசாத்துணைகள்

சின்னத்தம்பி,க.(2003).கல்வியில் அளவீடும் மதிப்பீடும், jeya International (Pvt) Ltd,கொழும்பு.

முத்துலிங்கம் ,ச.(1974).கல்விப் புள்ளிவிபரவியல் ,ஆசிர்வாதஅச்சகம் ,யாழ்ப்பாணம்.

Greg Attwood,(2001).Statistitics, Great Britain by Scotprint, London.

Swarupa Rani,T.(2004).Measurement and Evaluation in Education, Discovery publication, New Delhi.

Radha Mohan,(2016). Measurement and Evaluation in Education and assessment Education, Phi Learning Private Limited ,Delhi.